## இரத்தினபுரி பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இரத்தினபுரி பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான ஜேசீபீ இயந்திரம் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற நேரடியாக வேலைகளில் ஈடுபடுத்துவதற்காக சபைக்கு ஏற்படுகின்ற வருமானம்

மீளாய்வாண்டின் போது ரூபா 6,118,300 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி சபையின் வருமானமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான கொங்கிரீட் கலவை இயந்திரம், அழுத்தி மற்றும் டிப்பர் வாகனம் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நேரடித் தொழில்களுக்கு ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம் மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறித்த வாகனங்களும் இயந்திர உபகரணங்களும் தொடர்பாக விபரமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் கைத்தொழில் மேற்கொள்ளப்படுவதற்காக பல்வேறு நிறுவகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 51,780,895 தொகையும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் சபை நிதியத்திலிருந்து புறம்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அக் கைத்தொழில்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் அவதானிக்கப்படவில்லை.

(ஈ) பிரதேச சபை பொது வழங்கல்கள் கொள்வனவுகள் மற்றும் விநியோகங்கள் பொதுக் களஞ்சியத்தினூடாக கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் செலவினத் தலைப்பினூடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களின் படி, காசுக் கணக்கு மீதி ரூபா 9,334,052 தொகையானதுடன் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படியான மீதி ரூபா 9,103,546 தொகையானமையால் வேறுபாடு ரூபா 230,506 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படியான மீதிகளினதும் பட்டோலைகளினதும் படியான மீதிகளின் வேறுபாடு ரூபா 4,747,553 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் 132(ஓ) ஆம் பிரிவு | மக்கள் அங்கீகாரம் அல்லது பொது முக்கிய நடவடிக்கை அல்லது சம்பவம் அல்லது ஓர் சந்தர்ப்பம் தொடர்பாக அல்லது செலவினத்திற்காக ஒரு ஆண்டிற்கு ரூபா 1,000 இற்கு மேற்படும் செலவினங்களுக்காக அமைச்சரின் கடிதத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணான வகையில் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 308,647 கூட்டுத்தொகையான செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன. |
| 132(ஓ) ஆம் பிரிவு | புனித அல்லது நலன்புரி பிரிவுகளுக்கு நன்கொடையாக ஒரு ஆண்டிற்கு மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,000 இற்கு மேற்படும் செலவினங்களுக்காக அமைச்சரின் கடிதத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெறப்படாது ஆண்டின் போது சமயஸ்தல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 04 சந்தர்ப்பங்களிற்கு உரித்தாக ரூபா 363,379 தொகையான செலவினம் சபை நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதி 177 | 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி சபை தீர்மானத்தின் படி, மீளாய்வாண்டின் போது விலை மனுக்கள் கோரப்படாது தனியார் நிறுவகத்தால் ரூபா 208,919 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------- | |
| நிதிப்பிரமாணம் 371 | 2005 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 432,639 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| 2.8.4 மற்றும் 8.12.3 | மீளாய்வாண்டின் போது சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 236,874 தொகையான பொருட்கள் குறித்த மாதிரிகளிலிருந்தும் வேறு உடன்பட்ட நியமங்களுக்கு உரித்தானவையா என பரீட்சிக்கப்படுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,820,702 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,916,769 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளின் மிகை ரூபா 14,903,933 தொகையால் அதிகரித்திருந்ததுடன் இது 380 சதவீத அதிகரிப்பு என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் அதிகரிக்கும் வேகத்தைப் பார்க்கிலும் அதிகமான வேகத்தில் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமையே முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 211 | 47 | 72 |
| வாடகை | 1,300 | 162 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 705 | 544 | 204 |
| ஏனைய வருமானம் | 19,473 | 29,743 | 18,329 |

### 2.3.2. வருமானச் சேகரிப்பு செயலாற்றல்

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் சேவைக்கான கட்டணமும் ஏனைய வருமானங்களின் மதிப்பிடப்பட்ட வரமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 15 சதவீத, 66 சதவீத வீதவரி, வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும்

ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணங்களின் மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே 78 சதவீதமாகவும், 88 சதவீதமாகவும், 22 சதவீதமாகவும், 3 சதவீதமாகவும் குறைவைக் காண்பித்தது.

### 2.3.3 ஏக்கர் வரி

--------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 27,000 தொகையான நிலுவையான ஏக்கர் வரி மீதி நிலவியதுடன், அம் மீதிகள் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் காணப்பட்டது.

### 2.3.4 ஏனைய வருமானம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் v ஆம் பட்டோலையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் நிலவும் பரிமாற்றக் கம்பம் தொடர்பாக முறையான ஓர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு குறித்த கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முச்சக்கர வண்டி தொடர்பாக துணைக் கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலினூடாக வெளிப்படுத்தப்பட்ட வருமான உருவாக்கம் தொடர்பாக முறையான நடைமுறை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரப் பலகைகள் தொடர்பாக போதிய மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு முறையான துணைக் கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டு வருமானம் உழைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வரி மற்றும் கைத்தொழில் வரி தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் போதிய மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 நவம்பர் 29 ஆம் திகதிய 1839 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் வரியின் கீழ் 2014 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வரி 2014 ஏப்ரல் மாதம் 01 ஆம்

திகதிக்கு முன்னர் சபைக்கு அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பக்கோ லோடர், அமுத்த அமுக்கும் இயந்திரம் மற்றும் கொங்கிரீட் கலவை ஆகிய இயந்திர உபகரணங்கள் பிரதேச சபைக்கு வருமானம் சேகரிக்கக் கூடிய வழியான போதிலும், வருமானம் சேகரிக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக்கட்டணமும்**

(அ) 2014 செப்தெம்பர் முதல் திசெம்பர் மாதம் வரை குறித்த நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் பட்டோலை மூலம் இனங்காணப்பட்டு சபைக்கு அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் பட்டியலிடப்பட்ட வருமானமாக ரூபா 9,500,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு உரித்தாக எவ்வித வருமானமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தான நவம்பர் மற்றும் திசெம்பர் வரையிலும் நீதிமன்றத் தண்டப்பண வரமானம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானமாக ரூபா 9,288,584 தொகை அதாவது பட்டியலிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் குறைந்த வருமானம் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சருக்கான ஏற்பாட்டின் கீழ் ஒன்று ரூபா 1,950 இன் படியான 80 கூரைத்தகடுகள் ரூபா 156,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் விநியோகக் கட்டளை இல.113 இன் மூலம் 25 தகடுகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பொறுப்பேற்கப்பட்டமைக்கு குறித்த நபரிடம் இருந்து கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்வுப்

பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் பௌதீக ரீதியாக தகடுகள் எதுவும் சபை வளாகத்தில் இருக்கவில்லை.

(ஆ) சபை எல்லைக்குள் உள்ள மயானங்களில் 54 மயானங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அம் மயானங்களில் 31 ஏக்கருக்கும் மேலான 53 மயானங்கள் தொடர்பாக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சபைக்கு முறையாகப் பொறுப்பேற்கப்பட்டு பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------

(அ) 2014 யூலை 31 ஆம் திகதிய பொதுக் கூட்டத்தின் சபைத் தீர்மான இல. 04.05 இன் கீழ் ஒரு உறுப்பினருக்கு ரூபா 50,000 படி அமைச்சர் தீர்மானத்திற்கான ஏற்பாடு வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 982,450 பெறுமதியான பொருள் உதவி பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 (ஒ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக மேற்குறித்த கொடுப்பனவுகள் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. இவ் ஏற்பாடுகளின் கீழ் பொருள் மானியம் வழங்கப்படுகையில் நலனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பாக முறையான நடவடிக்கை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

iii. அதன் நலன்புரிப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டதை அடுத்து குறித்த செயற்பாட்டிற்காக அப் பொருள் பயன்படுத்தப்பட்டமைக்கு முறையான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. ரூபா 35,000 குழாய் கொள்வனவுகள், இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன் பொருள் விநியோகக் கட்டளையும் இருக்கவில்லை. பௌதீக ரீதியாகவும் சபையில் இருக்காமையால் அப் பொருட்களின் கொள்வனவு மற்றும் வழங்கல் தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்கு உட்பட்டிருந்தது.

(ஆ) இவ் அமைச்சரின் ஏற்பாட்டின் கீழ் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது ஒன்று ரூபா 830 படியான 775 பிளாஸ்டிக் கதிரைகள் ரூபா 643,250 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 556 கதிரைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(i) கணக்காய்வுத் தினம் வரையிலும் பௌதீக ரீதியாக சபை வளாகத்தில் எவ்வித பிளாஸ்டிக் கதிரைகளும் இருக்கவில்லை. மேலும், விநியோகக் கட்டளை இல. 116 இன் மூலம் 60 பிளாஸ்டிக் கதிரைகள் விநியோகிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பிளாஸ்டிக் கதிரைகள் பொறுப்பேற்கப்பட்டமைக்கு எவ்வித நபரிடமிருந்தும் கையொப்பம் இடப்பட்டிராததுடன் ரூபா 231,570 பெறுமதியான 279 பிளாஸ்டிக் கதிரைகள் தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

(ii) மேற்குறித்த கொள்வனவுகள் தொடர்பாக 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.4 மற்றும் 8.12.3 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பாக தொழில்நுட்ப அறிவுள்ள ஓர் நபரால் குறித்த பரிந்துரை வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 வெளிநாட்டு பயணச் செலவினம்

---

தனியார் நிறுவகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட 4 வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கு உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்ததுடன் சுற்றுலாவிற்காக ரூபா 1,773,472 தொகை சபை நிதியத்தால் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டிற்குச் செல்ல முன்னர் லீவு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறித்த 4 வெளிநாட்டுப் பயணத்தில் கலந்துகொண்டிருந்த போதிலும் வெளிநாட்டிற்குச் செல்ல முன்னர் கௌரவ ஆளுனர் அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்தியா சுற்றுலாவிற்கும் வியட்நாம் சுற்றுலாவிற்கும் உரித்தான கொடுப்பனவுகள் தொடர்பான ஓர் பட்டியல் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளிநாட்டப் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு உள்நாட்டு ரீதியாக பயன்படுத்தப்பட்ட விதம் குறித்த ஓர் அறிக்கை ஒன்று பயிற்சி முடிவுற்று ஒரு மாத காலத்திற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும் II இல் குறிப்பிடப்பட்ட இரு சுற்றுலாக்களின் போது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இவ் அறிக்கைத் திகதி வரை அத்தகைய ஆவணம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுச் செயலாளரின் PL/07/01/05/26 ஆம் இலக்க மற்றும் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதிய கடிதத்தின் படி, உள்ளூராட்சி நிறுவகத் தலைவர் ஒருவர் அல்லது பிரதித் தலைவர் ஒருவர் அல்லது உறுப்பினர் ஒருவர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படின் உரிய அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசு அல்லது வெளிநாட்டு நிறுவகம் ஒன்று இதற்காகச் செலவிடும் சகல செலவினங்களும் வழங்கல்களையும் ஏற்க வேண்டிய போதிலும் அச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்படாது மேற்குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.4 தார் பீப்பாக் கொள்வனவு

------------------------------------------

i. மீளாய்வாண்டின் போது ஒன்று ரூபா 16,560 படியான ரூபா 397,440 பெறுமதியான 180 லீற்றர்களான 24 தார் பாப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டு 2014 ஆகஸ்ட் 25 ஆம் திகதி ரூபா 411,750 கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 14,310 தொகை மேலதிக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் மேலதிகமாகச் செலுத்தப்பட் தொகை சபையால் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கணக்காய்வுத் தினமாகிய 2015.07.23 ஆம் திகதி வரை இருப்புப் புத்தகத்தின் படி 39 தார் பம்பிகளின் மீதி நிலவியதுடன் 06 கைத்தொழில்களுக்காக விநியோகிக்கப்பட்ட 25 தார் பீப்பாக்கள் இருப்புப் புத்தகங்களில் இருந்து கழிக்கப்பட்டிராததுடன் அவ்வாறு விநியோகிக்கப்பட்ட தார் பீப்பாக்களுக்காகப் பொருள் விநியோகிக்கும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 14 தார் பீப்பாக்கள் சபையில் பௌதீக ரீதியாக இருக்க வேண்டிய போதிலும்

பௌதீக ஆய்வின் போது 02 பீப்பாக்கள் மாத்திரம் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 தெரு விளக்குகளும் உபகரணக் கொள்வனவு

---

தெரு விளக்குகளைக் கொள்வனவு செய்து பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 225,000 தொகை ஏற்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதேச சபை பகுதியில் தெரு விளக்குகள் பொருத்தப்படுவது தொடர்பாக முறையான நடைமுறை இருக்கவில்லை.

(ii) மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் தெரு ஒளியூட்டல் தொடர்பாக ஏற்படும் ஆலோசனை தொடர்பாகக் கருத்திற்கொள்ளப்படாது தெரு ஒளியூட்டல் செயற்படுத்தப்படுவதுடன் தெருவிளக்குகளைப் பொருத்துவதற்காக இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தெரு விளக்குகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.4 ஆம் 8.12.3 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று அல்லாததுடன் குறித்த விதப்புரைகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலும் இருக்கவில்லை.

## 3.6 விளைவற்ற சொத்துக்கள்

---

(அ) இல. 68 – 4960 ஆம் பதிவு இலக்க லொறி தொடர்பாக இறுதியாக 2012 நவம்பர் 20 ஆம் திகதி ரூபா 413,679 தொகையான திருத்தவேலைகளின் பின்னர் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் ஓடும் நிலையில் அல்லாத செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டி மீள சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும் அவ் வாகனம் ஓடும் நிலையில் அல்லாது சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தத. இது தொடர்பாக முறையான நடைமுறை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்